நாவாந்துறைப் படிப்பகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 22 செவ்வாய்க்கிழமை (07-08 2001) தொலைபேசி: 3378 ஒலி: 239

### சர்வஜன வாக்கெடுப்பில்

# மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை வேண்டும்!

## தேர்தல் ஆணையாளரிடம் எதிர்க்கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்

(நமது நிருபர்)

**இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் மோசடிகளைத் தவிர்த்து நீதியானதும், நேர்மையானதுமான தேர்தலாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்**

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவுடன் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா மற்றும் காமினி லொக்குபண்டாவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் சிரேஷ்ட உபதலைவர் வீ ஆனந்தசங்கரி, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே வி.பி) சார்பில் அதன் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச, சிஹல உறுமய கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பக்கரணவக்க ஆகியோர் கலந்து கொண்டனர்

இச்சந்திப்பின் போது எதிர்க்கட்சித் தலைவர்கள தேர்தல் ஆணையாளரிடம் நடக்கப் போகும் சர்வஜன வாக்கெடுப்பு மோசடிகள் எதுவும் இன்றி நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலாக நடத்துவதற்கு முழு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். என்று கேட்டுக் கொண்டனர்.

சர்வஜன வாக்கெடுப்பைக் கண்காணிப்பதற்கு கண்

(8ம் பக்கம் பார்க்க)

## ரெலோ முகாம் சுற்றிவளைப்பு

(வவுனியா)

வவுனியா கற்குளி பகுதியிலுள்ள ரெலோவின் அலுவலகம் நேற்றும் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தேடுதலின்போது அலுவலக அறைகளில் ஆயுதங்கள் ஏதேனும் புதைக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிய குழிகள் தோண்டப்பட்டதாகவும், எனினும் ஆயுதங்கள் எதுவும் மீட்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. [ந-5]

### யாத்திரை சென்ற பஸ்

## ஆற்றில் வீழ்ந்ததில் 15பேர்பலி; 18பேர்காயம்

### மகியங்கனையில் சோகம்!

மகியங்கனைக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த பஸ் ஒன்று 'லொக்கலஓயா' ஆற்றில்பஸ் சரிந்து விழுந்ததில அதில் பயணம் செய்த 15 பேர்ஆற்றில் மூழ்கிப் பலியானார்கள். காயமடைந்த 18பேரும் பதுளை மற்றும் மகியங்கனை ஆஸ்ப்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தப்பஸ்விபத்து நேற்றுபிற்பகல்4மணிக்கு இடம்பெற்றது ஆற்றில் மூழ்கிய பஸ்வண்டியையும், சடலங்களையும் மீட்கும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. (வ)

## புலிகளுக்குதகவல்வழங்கிய முகமூடி நபர் எங்கே?

### விசாரணை தீவிரம்!

[கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதுவிடுதலைப் புலிகள் தாக்குதல்மேற்கொள்வதற்கு உடந்தையாகஇருந்து விமானத்தளம் பற்றிய சகல விபரங்களையும் அவர்களுக்கு வழங்கிய முகமூடி அணிந்த ஒருவர் பற்றி குற்றப் புலனாய்வுபபிரிவினர் அதிதீவிரமாகதுப்புத் துலக்கி வருகின்றனர்

விமானப் படைத்தள தாக்குதலின் சூத்திரதாரி என தேடப்படும் பிரஸ்தாப நபர் விமானப் படைத் தளத்தில் பணியாற்றியவராக இருக்க வேண்டும் அல்லது விமானத் தளத்தின் அமைப்புப் பற்றி

[8ஆம் பக்கம் பார்க்க)

## 26 இந்திய மீனவர்கள் சிறையில் உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்தியமீனவர்கள் 26பேர்தம்மை விடுதலை செய்யுமாறு நேற்று உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

கதுறப்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இம் மீனவர்கள் தம்மை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரி உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்த 50இந்திய மீனவர்களில் 24பேர்மனிதாபிமான அடிப்படையில் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (இ-6-10

## கூட்டணி நாளை சந்திப்பு

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவை தமிழர்விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு நாளை சந்தித்து பேச்சு நடத்துமென்று கூட்டணியின் உப தலைவர் வீ ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதிமீது எமக்கு கடுகளவும் நம்பிக்கைஇல்லை ஆனால் எமதுநிலைப்பாட்டை அரசுக்கு தெரிவிப்பதில் தவறில்லை என்பதற்காக

[8 ஆம் பக்கம் .பார்க்க]

### சர்வஜன வாக்கெடுப்பு

## 48 மணித்தியாலத்திற்குள் முக்கிய அறிவிப்பு வெளியாகும்!

(கொழும்பு)

சர்வஜன வாக்கொடுப்புத் தொடர்பாக அடுத்து வரும் 48 மணித்தியாலங்களுக்குள், முக்கிய அறிவித்தலொன்றை ஜனாதிபதி அறிவிப்பாரென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் இவ்வறிவிப்பு சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச்செய்வதாக்கூட இருக்கலாமெனவும் அரசியல் அவதானிகள் ஊகம் வெளியிட் [8ம் பக்கம் பார்க்க]

## சங்கர் நேற்று நீதிமன்றில ஆஜர்

(யாழ்ப்பாணம)

யாழ்பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டதையடுத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட திருநெல்வேலி தொலைத்தொடர்பு நிலையம் வைத்திருக்கும் வர்த்தகரான மகேந்திரம் சங்கர் நேற்று யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டிஸ் அன்ரனா போட்டோ ஸ்ரற் இயந்திரம் தொலை நகல் மற்றும் வாகனம் என்பன நீதிவான் முன்னிலையில் சமர்ப்பிக்கப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளரிடம் ஆவணங்கள் கையளிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் எம்.எச்.ஏ. எம். ஹிஸ்புல்லாவும செயலாளர் நிசாம காரியப்பரும் நேற்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து தமது புதிய தெரிவு தொடர்பான ஆவணங்களைக் கையளித்துள்ளனர்.

இந்த ஆவணங்களை ஏற்றுக்கொண்ட தேர்தல் ஆணையாளர் அதற்கான பற்றுச்சீட்டையும் வழங்கியுள்ளார் எனத் தெரிவித்த ஹிஸ்புல்லா முஸ்லிம் காங்கிரஸ் புதிய தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் என்றும் இதற்கு எதிராக நடப்பவர்கள மீது வழக்குத் தொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## புலிகளின் விருப்பப்படியே ஐ.தே.க. சர்வஜன வாக்கெடுப்பைஎதிர்க்கிறது

### பிரதமர் ரட்ணசிறி குற்றச்சாட்டு

[(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விருப்பத்திற்கு அமைவாகவே ஐக்கிய தேசியக் கட்சி சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்புக்கு எதிராகவும், அவசர காலச் சட்ட நீடிப்புக்கு எதிராகவும் செயற்படுகிறதென்றுபிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சிமீது குற்றம் சுமத்தியுள்ளார்.

காலி மாநகரசபை மண்டபத்தில் அண்மையில் நடை

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொதுக் கூட்டம்

(நெடுந்தீவு)

யா/நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர் வரும் வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-32)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

"பெண்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் சட்டத்தில் பங்கு" என்ற விடயத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இன்று யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

### கல்விக் குருதியை குடா நாடு பூராகவும் வழங்கி

# உறுதியான ஒரு கல்விப்பாரம்பரியத்திற்கு

# வித்திட்டது யாழ். மத்திய கல்லூரியே

## 185 வது ஆண்டு நிறைவு விழாவில் பேராசிரியர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இதயம் போன்று அமைந்து, குடா நாடு பூராவும் கல்விக் குருதியை ஊட்டத்துடன் வழங்கி உயர்துடிப்பான ஒரு புதிய கல்விக் கலாசாரத்தை ஊட்டி இந்த நாட்டிற்கு தேவையான அறிஞர் பரம்பரையை உருவாக்கி யுத்த சூழலால் புடம் போடப்பட்டு மிடுக்குடன் தலை நிமிர்ந்து நிற்கிறது யாழ். மத்திய கல்லூரி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 185 வது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக பட்டமேற்படிப்புத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்; மெதடிஸ்தமிஷன் கிறிஸ்தவ துறவியும், கல்விமானுமான பீற்றர் பேர்சிவல் மதமாற்றக் கொள்கையை மீறி இறுக்கமான சைவக் கொள்கையையும், பாரம்பரியத்தையும் பேணும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு கல்வி அறிவூட்டியது மட்டுமின்றி, இக்கல்லூரியிலேயே ஆசானாக்கியது மட்டுமின்றி கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிளை மொழிபெயர்த்து சமயசமரசத் தை நிலை நாட்டி நிரூபித்துக் காட்டுவதற்கு களம் அமைத்துக் கொடுத்தது இக் கல்லூரியே.

### தீர்க்கதரிசனம்

சென். பீற்றர் ஆலயத்துடன் இக் கல்லூரி இணைந்திருந்தாலும் அந்த அடிப்படையில இக் கல்லூரியை இயக்காது சகல இன, மத, மொழி வேறுபாடற்று தீர்க்க தரிசனத்துடன் இக் கல்லூரியை இயக்கியமை பாராட்டுக்குரியது.

அறிவுப் பசியை தீர்க்க தாகம் கொண்ட காலம் அந்தக் காலம் கல்வியை யாரும் விலை பேசவுமில்லை, விற்கவுமில்லை, கற்பிக்கப் பலர் ஆவலாக இருந்தனர். அக் கல்வியை நாடிப் பெற பெருமளவினர் ஆவலாக நின்றனர்.

இன்று போல் போட்டிப் பரீட்சையும் அக் காலத்தில் இருக்கவில்லை. வியாபார நோக்கம் கொண்ட தனியார் கல்வி நிறுவனங்களும் அக் காலத்தில இருக்கவில்லை.

ஜப்பானில் உள்ள கல்வி அமைப்புப் போல கல்லூரிகளும், தனியார் கல்வி நிறுவனங்களும் இணைந்த வகையில் செயற்படவேண்டியது அவசியமாகும் என்றார்.

கல்வியாளர்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர் (-)

## கைக்குண்டு மீட்பு

நாவற்காடுப் பகுதியில் வீட்டுத் தோட்டம் ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப் பட்டதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே இக் கைக்குண்டு மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [க]

### இலங்கைவங்கி

## விசேட கருமபீடம் நல்லூரில் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் நல்லூர் உற்சவகால விசேட கருமபீடத்தை நேற்று மு.ப 10.00 மணிக்கு மாநகரசபை ஆணையாளர் இராமலிங்கம் திறந்து வைத்தார்.

இலங்கை வங்கி பிரதான முகாமையாளர் சி. நடராஜலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதேச முகாமையாளர் ஏ. அருமைநாயகம் வங்கி முகாமையாளர் கே. உலகநாதன் மற்றும் வங்கி அதிகாரிகள் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆரம்பக் கணக்கு வைப்பினை வலம்புரி நிர்வாக இயக்குநர் சி. வெற்றிவேலாயுதம் தொடக்கி வைத்தார்.

இலங்கை வங்கியானது இனி வரும் காலத்தில் வெளிநாட்டுக் கடன் உதவியாக 5 இலட்சம் ரூபாவினை வழங்கவுள்ளதாகவும்,

இளைஞர், யுவதிகளுக்கான கடன் திட்டமொன்று விரைவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் பிரதான முகாமையாளர் சி. நடராஜலிங்கம் தலைமையுரையில தெரிவித்தார். (உ-6)

## அரசு தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்கு தாவிய பா. உறு. மீது விசாரணை

(கொழும்பு)

அரசாங்கக்கட்சியில் இருந்து எதிர்க் கட்சிக்கு சென்ற மூன்று நாடாளுமன்ற உறுப்பினர் மீது விசாரணைகள் இடம் பெறவிருக்கிறது என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைக்கப்பட்ட.

மூன்று பேர் கொண்ட குழுவில் அமைச்சர்கள் நிமால் ஸ்ரீபால டிசில்வா, டபிள்யூ டி. செனிவரட்ண மற்றும் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கிங்ஸ்லி ரி. விகரமரட்ண ஆகியோர் அடங்குகின்றனர்.

கட்சிவிட்டுக் கட்சி மாறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏ. ஆர். சின்னலெப்பை, ஆர். ஏ. அத்த உல்லா, எம். எஸ். தௌபீத் ஆகியோர் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்த போதிலும் தமக்கு இரண்டு வார கால அவகாசம் தரும்படி விசாரணைக் குழுவிடம் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கமைய இம்மாதம் 26 ஆம் திகதி விசாரணைகள் இடம்பெறும் என்று விசாரணைக்குழுவினர் அறிவித்துள்ளனர். (க.07)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆவணி மாதம் 02 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

(தொடர்ச்சி)

### மருதங்கேணி

| | |
|---|---|
| 164923 ஏ | 164923 பி |
| 164923 சி | 164923 டி |
| 164923 ஈ | 203953 ஏ |
| 203953 பி | 203953 சி |
| 203953 டி | 203955 ஏ |
| 203960 ஏ | 203960 பி |
| 203960 சி | 203960 டி |
| 203964 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 164932 ஏ | 194932 பி |
| 164932 சி | 164932 டி |
| 164932 ஈ | 194935 ஏ |
| 164935 பி | 164937 ஏ |
| 203957 ஏ | 203957 பி |
| 203958 ஏ | 203959 ஏ |

### வேலணை

| | |
|---|---|
| 14772 ஏ | 14772 பி |
| 14772 சி | 14826 ஏ |
| 14834 ஏ | 14834 பி |
| 14840 ஏ | 14871 ஏ |
| 14871 பி | 14872 ஏ |
| 14872 பி | 14873 ஏ |
| 14874 ஏ | 14874 பி |
| 14875 ஏ | 74877 ஏ |
| 14878 ஏ | 14882 ஏ |
| 14882 பி | 14899 ஏ |
| 14899 பி | 14899 சி |
| 14900 ஏ | 14903 ஏ |
| 14908 பி | 14903 சி |
| 14909 ஏ | 14906 பி |
| 14926 ஏ | 14926 பி |
| 14927 ஏ | 14927 பி |
| 14935 ஏ | 14936 ஏ |
| 14937 ஏ | 14937 பி |
| 14939 ஏ | 14941 ஏ |
| 14941 பி | 14954 ஏ |
| 14954 பி | 14954 சி |
| 14955 ஏ | 14957 ஏ |
| 14957 பி | 14957 சி |
| 14962 ஏ | 14962 பி |
| 14962 சி | 14963 ஏ |
| 14964 ஏ | 14984 பி |
| 14966 ஏ | 14066 பி |
| 14968 ஏ | 14968 பி |
| 14968 சி | 14970 ஏ |
| 14970 பி | 14970 சி |
| 14971 ஏ | 14072 ஏ |
| 15008 ஏ | 15008 பி |
| 15008 சி | 15009 ஏ |
| 15009 பி | 15009 சி |
| 150 9 டி | 15011 ஏ |
| 15011 பி | 15012 ஏ |
| 15018 ஏ | 15018 பி |
| 15026 ஏ | 15028 ஏ |
| [illegible] | 15050 ஏ |
| 15054 ஏ | 15054 பி |
| 15057 ஏ | 15057 பி |
| 15059 ஏ | 15059 பி |
| 15059 சி | |


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வி. எம். ஜெராட்

நாட்டுக்கூத்திலிருந்து மரபுவழி வழுவாத நல்லதோர் நடிகனும், நாட்டுக் கூத்து தயாரிப்பாளனும், நெறியாளனுமான அமரர் வி. எம். ஜெராட் அவர்களின் பிரிவு எம்மால் தாங்க முடியாத சுமையாகவுள்ளது.

சமூக சேவையாளனான கலைஞன் எமது கழகம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை கலை முயற்சிகளில் தோளோடு தோள் நின்று கைகொடுத்து உற்சாகமளித்து பங்காளியாகக் கலைப் பணி புரிந்தார்.

தான் பிறந்த குருநகரில் நாடக, நாட்டுக்கூத்துக் கலைஞர்களை உருவாக்கி பல அரிய தொண்டு புரிந்தவர்.

அன்னாரின் பிரிவால் துயரும் மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்

(கி/2366)



உ

அம்பாள் துணை

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

## "அன்ன சத்திரம்"

# திறப்பு விழா

மண்ணினிற் பிறந் தார்பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

சேக்கிழார் - பெரியபுராணம்

அம்பாள் அடியார்களே,

வணக்கம், எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அன்னதான வளர்ச்சிப் பணியை மேலும் விரிவுபடுத்தி 1 8 அடி நீளமான பெரிய "அன்னசத்திரம்" (அன்னதான மண்டபம்) புதுப் பொலிவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அன்னசத்திரத் திறப்பு விழா 14. 08. 2001 செவ்வாய்க்கிழமை காலை 9 00 மணிக்கு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

நிகழ்ச்சி விபரம்

காலை 9.00 மணி

"அன்னசத்திரம்" திறந்து வைத்தல்
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி, J.P அவர்கள்

காலை 9.30 மணி: திருமுறை பாராயணம்
துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்

காலை 9.45 மணி : சிறப்புரை
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன், B.A. அவர்கள்

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகசபை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை,

(C-2365)

# குருநாகலில் கடும் வெய்யிலிலும் மூவின மக்களும் ஆர்ப்பாட்டம்

## அரசியல் நோக்கர்கள் வியப்பு

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இன மக்கள் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்திய சம்பவம் சில தினங்களின் முன்பு இடம் பெற்றது.

குருநாகல் மாவட்டத்தின் கடும்ம் பொலதேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ எச் எம். அலவி அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பெருமளவிலானோர் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கோஷம் எழுப்பியவாறு சென்றனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மூவின மக்களும் இணைந்து நடத்திய மேற்படி ஆர்ப்பாட்டமானது இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிக்கு அடித்தளமிடுவது போலிருப்பதாக அரசியல் நோக்கர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளனர். (க)

## இராசிபலன்

07-08-2001
(ஆடி 22. செவ்வாய்)
திருதியை பி ப 5.10 வரை
பூரட்டாதி வை 6.03 வரை
ராகுகாலம் - 3 04 - 4 34
நல்ல நேரம் - 10 34 - 12.04
நான்காம் ஆடிச் செவ்வாய்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வ தரிசனம், குடும்ப சுகம், சிநேகிதர் உதவி.

**இடபம்**
காரிய அனுகூலம், தொழில் சிறப்பு, அதிகாரம், புதிய செய்தி.

**மிதுனம்**
சகோதரர் உதவி, காரிய தாமதம், வீண் பயம், புதிய தொழில் சிந்தை.

**கடகம்**
வீண் மனக்கவலை, சென்ற இடத்தில செல்வாக்கின்மை, வியாதி, காரிய தாமதம்.

**சிங்கம்**
சுவாரஸ்யம், நண்பர்கள் சந்திப்பு, திடீர் பயணம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
தொழில் விருத்தி, சுகவாழ்வ சத்துரு ஜெயம், காரிய அனுகூலம்.

**துலாம்**
காரிய இடையூறு, தர்மம், திடீர் நன்மை, தாழ்வு நிலை

**விருச்சிகம்**
பிரயாசபயம், நிலைமாறல், அற்பர் நேசம், முயற்சி தாமதம்.

**தனுசு**
கூடு முயற்சி, சந்தோசமான சம்பவம், பிரயாணம், அன்னியர் சந்திப்பு.

**மகரம்**
உறவினர் மனஸ்தாபம், சென்ற இடத்தில் கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், பொருள் விரயம்.

**கும்பம்**
புதிய முயற்சி, சயன சுகம், செலவாகுகு, உடல் நலம்.

**மீனம்**
தந்தை வழி உறவு, மனக் குழப்பம், காரிய தாமதம், சயன சுகக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்

## தனது பிள்ளைகளின் வாயில் மிளகாய்த்தூளை திணித்த பாசமுள்ள தந்தை

(கொழும்பு)

உணவில் உறைப்பு அதிகமாகக் காணப்பட்டதை அடுத்து சினங்கொண்ட தந்தைஒருவர் மிளகாயை அம்மியில் அரைக்கச்செய்து தனது பிள்ளைகளின் வாயில் வலுக்கட்டாயமாக திணித்தசம்பவம் ஒன்று சம்பகமுவ பகுதியில் சில தினங்களின் முன்னர் இடம்பெற்றது.

மேற்படி தந்தையின் மனைவியார் வெளிநாடு சென்றுவிட்டதால் இவருடைய சிறு பிள்ளைகளே உணவு தயாரிப்பது வழமையாம். சம்பவதினம் அவர் சாப்பிடும்போது சம்பலிற்கு உறைப்பு அதிகமாக இருந்ததையடுத்தே அவர் மேற்கூறியபடி மூர்க்கத்தனமாக நடந்துகொண்டாராம்.

பிள்ளைகளின் அழுகுரலைக்கேட்ட அயலவர்கள் ஓடி வந்து பாதிக்கப்பட்ட இரு பிள்ளைகளையும் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## கூட்டுறவாளர் தினத்தில் 51 பேர் கௌரவிப்பு

(மந்திகை)

79 ஆவது அனைத்துலக கூட்டுறவுத்தினத்தில் கட்டைவேலி, நெலலியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட 51 கூட்டுறவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மூத்த கூட்டுறவாளர் க சிதம்பரநாதன், ஓய்வுபெற்ற கூட்டுறவாளர்களவே. கார்த்திகேசு, மு பாலசிங்கம்,

மற்றும் 25 வருட கூட்டுறவு சேவையினைப் பூர்த்தி செய்த நால்வர், 20 வருட கூட்டுறவுச் சேவையைப் பூர்த்தி செய்த அறுவர் மற்றும் பணியாளருக்காக 38 பேர் இந்தவகையில் கௌரவம் பெற்றனர்.

மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ கனக சபாபதி கூட்டுறவாளர்களைக் கௌரவித்து அவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கினார். (உ-23)

## வெளிநாட்டில் உள்ள 'நம்மவர் நல்லூருக்குப்படையெடுப்பு

### ஆலய வீதிகளில் நாகரிக பவனி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் தொழில் புரியும் யாழ்ப்பாணத்தவர் பலரும் நல்லூருக்குப் படையெடுத்து வருகின்றனர்.

மேலும்பலர், யாழ்ப்பாணம் வருவதற்கு கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக காத்து நிற்பதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளையில் வெளிநாடுகளிலிருந்து வந்த நம் பெண்மணிகள் பலர் நல்லூர் ஆலய வீதியில் நவ நாகரிக உடையில் பவனி வருவதாகவும் இது நமது சைதப்பண்பாட்டு கலாசாரத்திற்கு வேட்டு வைப்பதாக உள்ளதாகவும் சைவ அபிமானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கந்தபுராண கலாசாரம் நிலவிய யாழ்ப்பாண மண்ணிற்கு இது தேவைதானா என்று பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். (க-10)

## உலக மெய்வல்லுநர் போட்டிக்கு இல. வீரர்கள் தெரிவாகவில்லை

(கொழும்பு)

கனடாவில் இடம்பெற்ற உலக சப்பியன் 400 மீற்றர் அரையிறுதி மெய்வல்லுநர் போட்டியில இலங்கை வீரர் சுபத்கருணாரட்ண 46.69 செக்கனில் ஓடிமுடித்து 7ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் 200 மீற்றர் முதல் சுற்றில் கலந்து கொண்ட தமயந்தி தர்ஷா 58.2 செக்கன்களில் ஓடி முடித்து 4ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவ் விருவரும் அடுத்த கட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7

## ஐஸ்கிறீம் விற்பனையால் பரீட்சார்த்திகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

ஐஸ்கிறீம் விற்பனையாளர்களால் க.பொ.த உயர்தரப் பரீட்சார்த்திகள் பெரிதும் இடைஞ்சல்களிற்கு ஆளாவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களில் இடத்திற்கு இடம் சென்று ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபடுவோர் பெருத்த சத்தத்தில் இனிமாப் பாடல்களை ஒலிக்க விடுவதுடன், பரீட்சை இடம்பெறும் பாடசாலைக்கு அருகாகவும் இவ்வாறன நடவடிக்கைகளில ஈடுபடுவதால் பரீட்சை எழுதுவதற்குத்தாம் பெரிதும் சிரமப்பட வேண்டி இருப்பதாக பாதிக்கப்படும் மாணவர்கள் மனக்கவலை வெளியிட்டுள்ளனர். (உ)

## நல்லூரான் திருவடிக்கு-14



### அருள்வேலன்நோக்கிருவன்

கலை சொல்லுஞ் சிலை சேர்ந்த கோபுரத்தில்
கவிந்தாடும மயில் கண்டு குயில்பாடவே
நிலைகொண்ட திருக்கோயில் நல்லூரிலே
நின்றாடுங் கந்தவேள் நிமலன் தனை
மலர்கொண்டே யர்ச்சித்து மன்றாடியே
மகிழ் பூசை செய்தேத்தின் மனக்கண்முன்னே
அலர்கின்ற கதிரென்ன அலங்காரமாய்
அருள்வேலன் நோக்கிடுவன் அடியார்களே

முதுபெரும் புலவர்
வை.க. சிற்றம்பலம்

### வாழ்வருள்கின்றான்

பாரொடு விண்ணாய்ப் பரந்தினிது அற்றைநாள்
சூரனுக் (கு) ஈய்ந்தருள் செய்யவேள்-பாரகம்
யாழ்.நகர நல்லூர் நனிது இருந்தென்றுமே
வாழ்வருள்கின்றான் வளம்

கச்சாயூர்பண்டிதர்
சுகசீலன்

### வழியிருக்க ஏனோ வாட்டம்?

நல்லூரான் திருவடிக்கோர் பாட்டுச் சொல்லு
நாளாந்தம், அதனாலே நமனை வெல்லு
கல்லூரும் எறும்பாலே குழியும் கல்லு
கைவேலின் துணையாலே இடரை வெல்லு!

உந்தனுக்காய் இருக்குதையா கந்த கோட்டம்
ஓடிப்போய் உடன் இணைவாய் அடியார் கூட்டம்
எந்தவினை ஆனாலும் எடுக்கும் ஓட்டம்
ஈடேற வழி இருக்க ஏனோ வாட்டம்?

குட்டித்தாத்தா
(வ. சின்னப்பா, தனங்கிளப்பு, சாவகச்சேரி.)

### ஓடிவந்து காத்தருள்

நல்லைநகர் வீற்றிருக்கும் நாயகனே!
நாடிடுவோர் துயர் தீர்க்கும் வேலவனே!
எல்லையில்லா யுத்தத்தின் கொடுமையினால்
எங்களினம் படும் துயரம் அறியாயோ?
தொல்லை இனி இல்லையென யாம்வாழ
திருமுருகா ! ஓடி வந்து காத்தருளாய்?

மு.முத்துக்குமார்
மானிப்பாய்

### வளரும் வள்ளல் வடிவேலன்

ராகம்:- சாரங்கா தாளம் :- ஆதி

பல்லவி
நல்லைநகர் வளரும் வள்ளல் வடிவேலன்
தொல்லைகள் துடைப்பான் என்றும்-மனமே!
(நல் - - - - - -)

அனுபல்லவி
முத்துநகைத் தெய்வ இடத்தினில் துணைசேர்க்க
முல்லைநகை வள்ளி வலத்தினில் அணைகூட்ட
(நல்லை- - - -)

சரணம்
அலையலையாய்த் துயர்கள் எழுந்தெதிர் வந்தாலும்
வகைவகையாய் இன்னல் எமக்கெதிர் வந்தாலும்
மலைமலையாய் இடர்கள் எதிர்வந்து நின்றாலும
தொகை தொகையாய்த் தடைகள் கிளர்ந்தெதிர் நின்றாலும்
(நல்லை - - - -)

ச. முருகையா

### தமிழினம் காக்கவருவாய்

முருகா முருகா முருகா முருகா
நல்லை நகர் ஆளும் கந்தா முருகா
வள்ளி மணவாளா வடிவேற்கரசே
வந்து எனை யாள்வாய் ஞானபண்டிதனே
(முருகா)
கர்மவினை தீர்க்கும் கந்தனே முருகா
உந்தன் கடைக்கண் பாராய் வேல்முருகா
தமிழுக்கு தலைவா முருகையனே
தமிழினம் காக்க ஓடிவா முருகா

பிரகாஸ்

# கூட்டங்களை வைத்து கூடிக் கலைவதை விட ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்

## ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி தெரிவிப்பு

(தென்மராட்சி)

இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் பலவேறு சீர்கேடுகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்தச்சீர்கேடுகளைக் களைவதற்கு நாம் அர்த்த புஷ்டியான நடவடிக்கைகளைஎடுத்தல் வேண்டும். கூட்டங்களை வைத்துக் கூடிக் கலைந்து செல்வதை விட ஆக்கபூர்வமான நடவடிக்கைளில் ஈடுபடல்வேண்டும். இத்தகைய பணிகளை முன்னெடுப்பதற்கும், மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் லயன்ஸ் கழகங்கள் மிகவும் பொருத்தமானவையாகும். சேவை ஒன்றையே தாரகமந்திரமாகக் கொண்டுள்ள இக்கழகத்தினர் ஏனையோருக்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டும்.

இவ்வாறு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு திருநாவுக்கரசு பருத்தித்துறையிலுள்ள உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில அண்மையில் நடைபெற்ற வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய போது குறிப்பிட்டார்.

கழகத்தின் தலைவர் லயன் என் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிராந்திய இணைப்பாளர்கள் லயன் எஸ். எஸ் தங்கராசா, லயன் எஸ். பத்மநாதன் வலயத் தலைவர் லயன் என் ஞானராசா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகப் பங்கு பற்றியிருந்தனர்.

ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

மாவட்டத்திலுள்ள கிராமங்களில் வயோதிபர்கள் பலர் கவனிப்பாரற்று வாழ்ந்து வருகின்றனர். இத்தகையவர்களின் வாழ்க்கைத் தேவைகளை இனங்கண்டு சேவை புரிய வேண்டும். அத்துடன் கிராமங்களைப் பொறுப்பு எடுத்து அங்குள்ள தேவைகளை அறிந்து சேவைப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

லயன்ஸ் கழகங்கள் ஆக்கபூர்வமான செயல் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். அதன் மூலம் பல்வேறுபட்ட மக்களுக்குச் சேவைகளை வழங்கமுடியும். சமுதாயத்தில் பெரியவர்கள் சிலர்களை திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுத்திவருகின்றனர். வறுமை, தொழில் வாய்ப்பின்மை போன்றவை காரணமாகவே இத்தகைய சமுதாயச் சீர்கேடுகள் இடம் பெற்று வருகின்றன என்றார்.

பிராந்திய இணைப்பாளர் லயன் எஸ் தங்கராஜா, உட்பட பலர் இந் நிகழ்வில உரையாற்றினர். (க-52-77)

விமானப்படை உயரதிகாரிகள்

## படைத்துறை நீதிமன்றில் விசாரிக்கப்படுவர்

(கொழும்பு)

கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட விமானப்படை உயர் அதிகாரிகளான எயர் கொமடோர் ஆனந்தவிங்கொமாண்டர் என் ரத்நாயக்க. புவனேக, அபய சூரிய ஆகியோர் படைத்துறை நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளனர்.

மொத்தம் 11 விமானப்படை வீரர்கள் இந்தவகையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

படைத்துறை நீதிமன்றத்தில் உயர் படை அதிகாரிகள் விசாரிக்கப்படுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இல.மாணவியின் ஓவியம் உலக நாளேட்டில் பதிவு

(நெடுந்தீவு)

இலங்கை மாணவி ஒருவர் வரைந்த ஓவியம், உலகின் சிறந்த ஓவியங்கள் வரிசையில் இணைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 100ற்கும் அதிகமான நாடுகளில் காட்சிக்கு வைக்கப்பட்ட ஹம்பகாரத்ன பால மகளிர் கல்லூரி மாணவியான சத்துரா கல்னி என்ற இந்த மாணவியின் ஓவியம் யுனிசெவ் நிறுவனத்தினால் உலகின் சிறந்த ஓவியங்களில்ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து அடுத்த ஆண்டுக்கான உலக நாளேட்டில் இது பதிவாக உள்ளது.

மேற்படி மாணவியை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாராட்டியுள்ளார். (உ-7)

## வைர விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ மனோன்மணி சனசமூக நிலைய வைர விழா கடந்த சனிக்கிழமை சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் செல்வன் நடராஜா ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் க. மணிபல்லவராஜன் கலந்து சிறப்பித்தார். (உ)

---

## கையேடு வழங்கல் இன்று

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் போதுமேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றவுள்ளவர்களுக்கான நாட்குறிப்பேடு இன்று யாழ் வேம்படிமகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ-10)

---

யாழ். இலக்கிய

## வட்டத்திற்கு எட்டு இலட்சம்

(அரியாலை)

யாழ். இலக்கிய வட்டத்திற்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார இந்துசமய கலாசார அமைச்சினால் எட்டு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியில் சுமார் இரண்டரை இலட்சம் ரூபா சுதந்திரன் சிறுகதைத் தொகுப்பிற்கும், மூன்று இலட்சம் ரூபா இதுவரை பிரசுரமாகாத நூல்கள் வெளியிடுவதற்கும், மிகுதிப்பணம் இலக்கியக் கர்த்தாக்களின் நூல்களை கொள்வனவு செய்வதற்கும் பயன்பட உள்ளதாக செயலாளர் க. குணராசா (செங்கை ஆழியான்) தெரிவித்தார். (க-106)

முள்ளியவளை மருத்துவ மனையில்

## குருதிச்சோகை நோய்க்கு 275 பேர் சிகிச்சை

(வவுனியா)

முள்ளியவளை மத்திய மருந்தக மகப்பேற்று மனையில கடந்த மாதம் குருதிச்சோகை நோயினால் பாதிப்புற்ற 275 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றிருப்பது, வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

போதிய ஊட்டச்சத்து இன்மையால் மேற்படி நோய்க்கு இலக்கான 1-5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும், முதியவர்களும்அனேகர் இவர்களில் அடங்குவர் எனவும்,

வன்னிக்கான மூன்றாவது காலாண்டு மருந்து வகைகள் இதுவரை அனுப்பி வைக்கப்படாமையினால்வேறு பல நோய்களின் தாக்கமும் அதிகரித்திருப்பதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன (உ)

## ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்றுமுன்தினம்காலைஈ.பி.டி.பியாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில், ஈ.பி.டி.பியின்பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச சபைத் தலைவர்கள கட்சி முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்துகொண்ட சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பானகலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் சர்வஜன வாக்கெடுப்புக்குஆதரவாகப்பொதுக்கூட்டம், கருத்தரங்கு, துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள் மூலமாக தீவிர பிரசாரம் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ)

திருடர் செயலுக்கு

## துணைபோக மறுத்த ஓட்டோ சாரதி மீது தாக்கு

(மந்திகை)

திருட்டுக் கும்பல் ஒன்றின் களவுச் செயலுக்கு துணைபோக மறுத்த முச்சக்கரவண்டிச்சாரதி கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலைப்பகுதியில் இடம்பெறற இச் சம்பவத்தில கோணேஸ தங்கராசா (வயது 45) என்பவரே தாக்கப்பட்டவராவார்.

திருட்டுப் பொருட்களை தமது வாகனத்தில் ஏற்றிச் செலல மறுத்தமைக்காகவே இவ்வாறு கடுமையாகத் தாக்கபபட்டதாக கூறப்படுகிறது. (உ-23)

குடிநீர் விநியோகம்

## அபி.திட்டத்திற்கு 2இலட்சம் நிதி ஒதுக்கு

(புலோலி)

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலையில் குடி நீர் அபிவிருத்தித்திட்ட நிர்மாணத்திற்கென 2இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கே.சிவாஜிலிங்கத்தின் நடவடிக்கைகளையடுத்தே, வல்வெட்டித்துறை நகரசபை இந்நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இக்குடி நீர் விநியோகத் திட்ட நடவடிக்கைகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றதையடுத்து நிர்மாணவேலைகள நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (உ-52)

ரெலோ அமைப்பினருடன்

## மோதல் இடம் பெற்றமை குறித்து நாம் மன்னிப்புக் கோருகிறோம்

ஈ. பி. ஆர்.எல்.எவ்(வரதர்) அணியினர் தெரிவிப்பு

(வவுனியா)

எமக்கும் ரெலோ அமைப்பினருக்கும் இடையில் கடந்த 14 ஆம் திகதி வவுனியா குருமன் காட்டுப்பகுதியில் இடம் பெற்ற துரதிஷ்டவசமான சம்பவங்களுக்கு நாம் மன்னிப்புக் கோருகின்றோம்.

வவுனியா குருமன்காட்டில் ரெலோ இயக்கத்தினருடன் கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்றமோதல் தொடர்பாக ஈ பி ஆர் எல் எவ்வின் வரதரணி வெளியிட்ட அறிக்கையில மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில் ரெலோ தலைவர் அடைக்கலநாதன் ஊடகங்களுக்கு உண்மைக்கு மாறாகவும சர்வஜன வாக்கெடுப்புக்கான பிரச்சாரமாகவும் இதைப்பயன்படுத்தி மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது வேடிக்கையானது.

நடந்தசம்பவமானது கடந்த ஒரு மாத காலமாக இருந்து வந்த முறுகல் நிலையின் விளைவேயாகும். எமது அலுவலகத்திற்கு, அண்மையில் அமைந்துள்ள அமரர் குகன் பஸ் தரிப்பிடத்திற்கு இரவு நேரங்களில் மது போதையுடன் வருகின்ற ரெலோ உறுப்பினர்கள் அவர்களின் ஒழுங்கற்ற இளைஞர்களும் தங்கியிருந்து மது போதையில் கூக்குரல் இடுவது வீதியில் செல்பவர்களை கேலி செய்வதும் விசாரணை செய்வதும் அடிபபதும் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் எமது உறுப்பினர்கள் இருவர் வேறு வேறு தினங்களில் இந்தஇடத்தில் தாக்கப்பட்டனர். இது தொடர்பாக நாம் ரெலோவின் பொறுப்பாவர்களுடன் பேசியபோதும் இவர்களின் நடவடிக்கைகளை நிறுத்த பொறுப்பானவர்கள் முற்படவில்லை.

3 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் எமது உறுப்பினர் ரகு என்பவர் கடைக்கு சென்று வந்தபோது ரெலோ செல்வா தலைமையிலானகுழுவினரால் தாக்கப்பட்டு கைத்துப்பாக்கி ஒன்றை நெற்றியில் வைத்து அச்சுறுத்தப்பட்டார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற எமது உறுப்பினர்கள் ரெலோ உறுப்பினர்களுடன் வாக்குவாதப்பட்டனர். இறுதியில் கைகலப்பில் முடிவுற்றது. இதன் பின் 15 பேர் கொண்ட ரெலோ உறுப்பினர்கள் கத்தி, வாள், பொல்லுகள் சகிதம், கெட்ட வார்த்தைகள் பேசிக்கொண்டு எமது காரியாலயத்திற்கு முன்னும பின்னும் கூக்குரல் இட்டனர்.

அப்போது எமது அலுவலகத்தின் பின்புறம் காவலில் நின்ற உறுப்பினர்கள் வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர் கலைந்து சென்ற கும்பல் 4 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் குருமன்காட்டு சந்திக்கு சென்ற எமது உறுப்பினர் இருவரை சந்தியில் வைத்து இரும்புக்கம்பிகளால் அடித்து கடுமையாக தாக்கி இது ஆரம்பம் என்றும் கூறியுள்ளனர்.

மீண்டும் 11.00 மணியளவில் எமது அலுவலக பிரதான வாயிலுக்கு வந்த ரெலோ உறுப்பினர்கள் சண்டை போட முற்பட்டபோதே எமது தற்பாதுகாப்பிற்காக அவர்களை எமது உறுப்பினர்கள் தாக்கினர் இந்த வேளையில் ரெலோ அலுவலகத்தின் பின்புற காவலிலிருந்து எமது அலுவலகம்மீது துப்பாக்கிபிரயோகம் செய்யப்பட்டது. இதன் பின்பொலிஸ் அதிகாரிகள் இராணுவத்தினர் நிலைமைகளை விசாரித்து பிரச்சினைகளைகட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்தனர். ஆனாலும்4 ஆம் திகதிகாலை8-00 மணிக்கு நாம் பொலிஸில் முறைப்பாடு செய்தோம்.

உண்மை இதுவாக இருக்க ஒரு பொறுப்பானவர், பொறுப்பற்ற தனமாக பத்திரிகையாளர்களையும் மக்களையும் ஏமாற்ற நினைப்பது சுய வேடத்தை உரித்துக் காட்டுவதாகும். சமபவங்களை நேரில் பார்த்த மக்களின் கண்களில் மண்ணைத் தூவ எண்ணுவது தவறாகும் அதே வேளையில் தமது அலுவலகத்தில் ஐந்து கட்சிகளினதும் முக்கியஸ்தர்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது தமது அலுவலகம்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்பது அப்பட்டமானபொய்யாகும். (ச)

## இன்று ஒரு தகவல்

### யார் விலங்கு என்பது யாருக்கும் விளங்கும்

நெடிய கானகத்திலொரு கொடிய வேடன் வாழ்ந்து வந்தான் அவன் ஒருநாள் வில்லம்புகளை ஏந்தி வேட்டைக்குப் புறப்பட்டான். பகல் முழுவதும் வேட்டைக் காக்காட்டில் திரிந்தான். விலங்குகள் கிடைக்கவில்லை. பட்டினியால் வாடினான் மாலை நேரம் பெருமழை கொட்டியது குளிரால் நடுங்கினான் அவன் கையில் வில்லம்புகள் நழுவி விட்டன. அப்போது ஒரு பெரிய வேங்கைப் புலி அவன் மீது பாயவந்தது புலியினால் கிலியடைந்த அவன், தப்பும் வழியின்றி ஒரு வானளாவிய மரத்தின் மீது ஏறிக் கொண்டான். புலிக்கு மரம் ஏறத் தெரியாது. 'ஏ வேடனே! எத்தனைகாலமானாலும் நீ ஏறிய வழியில் தானே இறங்க வேண்டும்? உன்னை விட்டு நான் போக மாட்டேன்' என்று புலி சொல்லி மரத்தடியில் அமர்ந்து கொண்டது.

அந்த மரத்தின் மீது ஒரு கரடி இருந்தது கரடியைக் கண்ட வேடன் நடுங்கினான். கரடி அவனைப் பார்த், அன்புடன் 'அன்பனே நீ அஞ்சாதே! நான் வசிக்கும் இடத்துக்கு நீ வந்திருக்கிறாய். என்னிடம் வந்தவன் பகைவனே யானாலும் அவனைக் காப்பது நான் தருமம், நான் உன்னைக்கொல்லமாட்டேன் நீ பயப்படாமல் இந்த இரவை என்னுடன் கழித்து விடிந்த பின் உன் இருப்பிடம் போகலாம்' என்றது.

புலி 'தம்பி, கரடியே! நீ செய்வது முறையல்ல. இந்த வேடன் நமது விலங்கு இனத்துக்குப் பகைவன் நீ இவனுக்கு இடம் கொடுக்காதே. இனமல்லாத இவனுடன் கூடுசேரக் கூடாது இது பிழை இவன் உன்னையும் என்னையும் கொல்லும் கொடுமையாளன் இவனை விரட்டு' என்றது. 'கரடி, புலியண்ணா! உன் வார்த்தையில் உண்மையிருக்கிறது. இவன் கொடியவன் தான். ஒப்புக் கொள்ளுகிறேன் இருப்பினும் என்வீடு தேடிவந்தவனை விரட்டக் கூடாது. இவன் என் அடைக்கலப் பொருள் இவனை நான் விரட்ட மாட்டேன்' என்றது

இரவு பன்னிரண்டு மணியாயிற்று, வேடன் தூக்கத்தில் மயங்கினான். கரடி 'வேடனே! நீ தூங்கி விழுகின்றனையே! கீழ் விழுந்தால் புலி உன்னை அலவாத துண்டைப் போலத்தின்று பசியாறும். ஆதலால் என் தொடை மீது தலை வைத்துப் படுத்துக் கொள்' என்றது வேடன் கரடியின் தொடை மீது தலை வைத்துச் சாய்ந்து படுத்துக் கொண்டான். கரடி அவனைக் கையால் அணைத்துக்கொண்டது

புலி 'தம்பி! நீ செய்வது மோசம். இவனால உனக்கு வரும் நாசம். இவன் மீது உனக்கு ஏன் நேசம். இவன் நமதுகுலப்பகைவன், இவனைக்கீழே தள்ளிவிடு, எனக்குக் கடும் பசி காது அடைக்கின்றது இவனை உண்டுமகிழ்ந்து போவேன்' என்றது. கரடி 'அண்ணே! அடைக்கலமாக வந்தவனை நான் தள்ளமாட்டேன், நம்பியவனைக் காப்பது என் கடமை' என்றது சிறிது நேரம் பொறுத்து வேடன் தெளிவு பெற்று எழுந்தான் கரடிக்குத் தூக்கம் வந்தது. 'வேடனே! எனக்கு இப்போது உறக்கம் வருகிறது உன் மடி மீது தலை வைத்து சிறிது தூங்குவேன்' என்று கூறி, அவன் தொடையில தலை வைத்துப் படுத்துக் கொண்டு உறங்கி விட்டது

இந்தக்காட்சியைப்புலிபார்த்தது 'வேடனே! எனக்குப பசியின் வேதனை மிகுந்துள்ளது. எனக்கு இப்போது உணவு தேவை, இந்தக்கரடி விடிந்த பின் உணவின் பொருட்டு உன்னைக் கொன்றாலும் கொல்லும். நான் உன்னைக் கொல்ல முயன்றேன். பசித்தவனுக்குஇட்டிலி கிடைத்தால் என்ன, தோசை கிடைத்தாலென்ன? சியாற வேண்டியதுதானேமுக்கியம், நீ கரடியைத் தள்ளி விடு கரடியைத் தின்று விட்டுப் போவேன். நீஉன்இருப்பிடப் போகலாம். ஆதலால் உனக்கும் சுகம், எனக்கும் சுகம். கரடியைத் தள்ளு' என்றது, நன்றி கெட்ட வேடன் நல்லது என்று நம்பி, மடி மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்த கரடியைப பிடித்துக் கீழ தள்ளி விட்டான்.

கீழ விழுகின்றபோது கரடி தாவி மற்றொரு கிளையைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறியது கரடி தன்னைநோக்கி வருவதையும், தான் செய்த பிழையையும் எண்ணிப்பார்த்தான 'கீழ தள்ளிய என்னைக்கரடி அடித்துக் கொன்றுவிடும், என் வாழ்வுமுடிந்தது என்று எண்ணி நிலை குலைந்தான். கரடி வேடனைப பார்த்து' அன்பனே! நீ அஞ்ச வேண்டாம். நம்பிய என்னை நன்றி இன்றி புலிக்கு உணவாகக கீழ தள்ளினாய். ஆயின் என் இருப்பிடம் வந்து சேர்ந்த உன்னை நான் கடைசி வரை காப்பாற்றுவேன். நீ செய்த பிழையை நானும் செய்ய மாட்டேன். அதனால் நீ பயப்பட வேண்டாம் என்று ஆறுதல் கூறியது.

புலி நம்பிக்கை இழந்து போய் விட்டது. பொழுது விடிந்ததும் வேடன் தன் இருப்பிடத்துக்குப் போனான். இப்போது எண்ணிப் பாருங்கள் கரடி விலங்கா? வேடன் விலங்கா? ☐

நன்றி
அறநெறி

# இலங்கைப் பாராளுமன்றம் மேலும் இருமாதங்களுக்கு ஒத்திவைக்கப்படலாம்

(கொழும்பு)

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட காலத்துக்குள் தற்போதைய நெருக்கடி நிலைக்கு அரசு தீர்வு காணத் தவறுமானால் மேலும் இரண்டு மாதங்களுக்கு பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்படலாம் என்று அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜயரத்தினவை மேற்கோள் காட்டி அமைச்சரவை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்குள் அரசியல் நெருக்கடிகள் தீர்க்கப்படாவிட்டால் மேலும் இரண்டு மாதங்களுக்கு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (வ)

## யுத்தமா? சமாதானமா?

# மக்கள் கருத்தை அறிய அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவது அவசியம்

### இன்றைய அவசர தேவை இதுவென்கிறார் நாணயக்கார

(கொழும்பு)

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு யுத்தத்தை நடத்த வேண்டுமா அல்லது சமாதானத்தை பின்பற்ற வேண்டுமா என்ற மக்கள் கருத்தை அறிந்து கொள்வதற்கு, இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டும்.

இவ்வாறு யுத்தத்தினால் காணாமல் போன படையினர் பாதுகாவலர் சங்கப் பொதுச்செயலாளர் நாணயக்கார அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துக்கூறுகையில் புதிய அரசியல் யாப்பு தேவை என்பதை சகல அரசியல் கட்சிகளும் ஏற்றுள்ளதனால், அதற்கொரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் பட வேண்டியதில்லை.

ஆனால் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க யுத்தமா? சமாதானமா? தேவை என்பது குறித்து மக்களின் கருத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும்,

அவ்வாக்கெடுப்பில், மக்கள் யுத்தம் தான் தீர்வென்று தெரிவித்தால், 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கி யுத்தத்தை தீவிரப் படுத்த வேண்டும்,

மாறாக சமாதானத் தீர்வு வேண்டுமென்று மக்கள் விரும்பினால், சுயாட்சி உட்பட எந்தவகையான தீர்விலும் தமிழ் மக்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்டு சமாதானத் தீர்வு காணப் பட வேண்டும்.

அரசாங்கம் யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாதென ஏற்றுக் கொண்டுள்ள போதும் சமாதானத் தீர்வை அடைவதில் இதுவரை அக்கறை செலுத்தவில்லை.

இதனாலேயே அழிவுகளும் இழப்புக்களும் அதிகரித்துள்ளன.

அத்துடன் நாடு அழிவுப் பாதையில் செல்வதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தேசிய நலனில் அக்கறை செலுத்தாமையே காரணமென்றும் குறை கூறியுள்ளார். (இ)

### கம்பராமாயண சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலயத்தில் தினமும் மாலை 5 15 மணிக்கு இடம் பெற்று வரும் கம்பராமாயண சொற்பொழிவில் இன்று ''சீதா கல்யாணம்'' என்ற தலைப்பில் பிரம்ம ஸ்ரீ சிவ வை நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

### நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினரால் தினமும் மாலை 6 00 மணி தொடக்கம் 7. 15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இன்று, திருமதி பங்கயற்செல்வி முகுந்தனின் பாட்டுக் கச்சேரி இடம் பெறவுள்ளது. (செ)

### 42 ச.சமூக நிலையங்கள் பயன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பகுதியைச் சேர்ந்த 42 சன சமூக நிலையங்களின் அபிவிருத்திப் பணிக்கென வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது (உ)

### வாக்காளர் அட்டைகள் அனுப்பப்பட்டன

(கொழும்பு)

இம்மாதம் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பிற்கான வாக்காளர் அட்டைகள் நேற்று தபால் நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படும் எனவும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் இப்பணி இடம் பெறும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (க-07)

### சிறுமி பலி

(வவுனியா)

அனுராதபுரம் நொச்சியாகமையில ஊர்காவல்படைவீரர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 9 வயது சிறுமி கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் படைவீரர் தனது துப்பாக்கியை சுத்தம் செய்து கொண்டிருந்த போதே இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

# புலிமுத்திரை குத்துகிறார் ஜனாதிபதி சந்திரிகா!

### டாகடர் ஜெயலத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்கள மக்கள் மத்தியில் தன்னை விடுதலைப்புலிகளின் ஆதரவாளனாகவும், தேசத் துரோகியாகவும், தன்னை சந்திரிகா அரசாங்கம் முத்திரை குத்துகின்றமை விசனத்துக்குரியதென்றும் ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனா அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை தென்னிலங்கையில் வெளிப்படுத்தியதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உட்பட அரச ஊடகங்கள் தன்னை ஒரு புலியெனவும் சிங்கள மக்களின் துரோகியெனவும் வசைபாடியுள்ளதாகவும் இதனால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜெயலத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி குமாரதுங்க தன்னை 1998ம் ஆண்டு முதல் விடுதலைப்புலிகளினதும் ஐக்கிய தேசியக்கட்சியினதும், இடைத்தரகர் எனக் கிண்டல் செய்துவருகின்றாரென்றும், அரசுசார்பு லேக்ஹவுஸ் பத்திரிகையொன்றில் வன்னி துணுக்காயிலுள்ள மாவீரர் இல்லத்தில் தான் வணக்கம் செலுத்துவது போன்ற படமொன்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்;

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரிவில் வழக்குத்தாக்கல் செய்துள்ளதாகவும் ஜெயலத் மேலும் தெரிவித்துள்ளார். (இ

### சிங்களம் புரியவில்லை

# அவகாசம் தருமாறு கோரி முஸ்லிம் காங்கிரஸ் கடிதம்

ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ள வருமாறு முஸ்லிம் காங்கிரசின் 3 எம் பி.களுக்கும் 1 அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி. எம். ஜயரத்தின அனுப்பி வைத்த கடிதம் சிங்களத்தில் இருப்பதால் அதுபற்றி பூரணமாக விளங்கிக்கொளவதற்கு இரண்டு வார கால அவகாசம் தருமாறு கோரி முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர் டி. எம் ஜயரத்தினாவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இதேவேளை தன்னைதானே முஸ்லிம்காங்கிரஸ் தலைவராகப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் எம். எச். ஏ. எம் ஹிஸ்புல்லா தான் சட்டப்படி முஸ்லிம் காங்கிரசின் தலைவராகத் தெரிவாகியுள்ளதாக தெரிவித்தார்; (வ)

# ஹிஸ்புல்லாவுக்கு பேரியல் அஷ்ரப் வாழ்த்து

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவராக ஹிஸ்புல்லா தெரிவு செய்யப்பட்டதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். முஸ்லிம்களின் அமைதியான வாழ்க்கைக்கும், பாதுகாப்பிற்கும் அபிலாசைகளுக்கும் அக்கறையுடன் செயற்படும் ஒரு முஸ்லிம் முக்கியஸ்தரிடம் தலைமைப் பதவி சென்றதையிட்டு தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் தலைமைப் பதவியை துணிகரமாக ஏற்றதையிட்டு ஹிஸ்புல்லாவைத் தான் பாராட்டுவதாகவும் பேரியல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஹிஸ்புல்லா தெரிவு செய்யப் பட்டதை முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நிராகரித்துள்ளமை தெரிந்ததே; (ந-4)

# தனி நாட்டு கோரிக்கையை கைவிட திபெத்தியர் தயார்

## தலாய்லாமா தெரிவிப்பு

(புதுடில்லி)

திபெத்தியர்களுக்கு உண்மையான அதிகாரங்களைச் சீனா கொடுக்க முன்வந்தால் வெளிநாடுகளில் வாழும் திபெத்தியர்கள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவார்களென்று தலாய்லாமா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த திபெத்திய மாணவர்கள் மத்தியில் மேலும் பேசுகையில்; சீனர்கள் திபெத்தியர்களை சகோதர சகோதரிகளாக நேசமுடன் நடத்துவார்களென்றால் தனி நாட்டுக் கோரிக்கையை திபெத்தியர்கள் முன்வைக்க மாட்டார்கள். இதேவேளை சீனாவில் மேலைத்தேச நாகரீக மோகம் பரவி வருவது குறித்தும் அவர் குறைபட்டுக் கொண்டார். (து)

# இராமநாதபுரத்தில் பெரும் தீ விபத்து

# 24 பேர் பரிதாப உயிரிழப்பு

## தமிழக முதல்வர் அனுதாபம்

(புதுடில்லி)

இந்தியாவின் தமிழ் நாட்டின் இராமநாதபுரத்தில் மனநோயாளர்கள் தங்கியிருந்த சிகிச்சை விடுதி ஒன்றில் நேற்றுக் காலை தீவிபத்து ஏற்பட்டமையால் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

40 பேர் வரையில் சிகிச்சை பெற்று வந்த இந்த விடுதியில் பலியான 24 பேரும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் இருந்தமையால் அவர்களால் தப்பிச் செல்லவோ, அவர்களைக் காப்பாற்றவோ முடியவில்லை. என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், 5 பேர் எரிகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; மரணமடைந்த ஒவ்வொருவரின் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படுமென்றும் படுகாயமடைந்தோருக்கு 15 ஆயிரம் ரூபாயும் சாதாரணமாக காயமடைந்தோருக்கு 6 ஆயிரம் ரூபாவீதம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக விபத்து இடம்பெற்ற பாதுஷா நோயாளர் மருத்துவ நிலையம் என்ற இந்நிலயத்தை நடத்தி வந்த மொஹைதீன் மற்றும் மனைவி மும்தாஜ் அவரின் சகோதரர் உட்பட 5 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மனநோய் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியினாலேயே இத் தீவிபத்து இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் தரப்பு சந்தேகப்படுகின்றனர். (க-07)

# வழக்கு முடியும் வரையில் முதல்வர் ஜெயலலிதா குற்றவாளியே

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதா மேன்முறையீட்டுத் தடை உத்தரவுக்காகக் காத்திருந்ததால் வழக்கு முடியும் வரையும் அவர் குற்றவாளி போன்றே கருதப்படுவார் என சட்ட வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மத்திய அரசின்வழக்கொன்றின் தீர்ப்புப்படி ஓர் அரசுத்துறையில் இருப்பவர் குற்றவாளியென உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் குற்றவாளி அத் தீர்ப்புக்கு இடைக்கால தடை உத்தரவு விதிக்குமாறு மறுதாரர் மனுச்செய்ய முடியும் என்றும் ஆனால் வழங்கப்பட்ட தண்டனையை குறைக்குமாறு கோர முடியாது என நீதிபதிகள் கூட்டாக தெரிவித்தனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் நிலபேர வழக்கில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

அத்தீர்ப்பிற்கு இடைக்கால தடை உத்தரவு விதிக்கும்படி ஜெயலலிதா மனுச்செய்திருந்தாலும் நீதிமன்றத்தின் தண்டனையை மாற்றுவதாக அமையமாட்டாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். (க-து)

# எதியோப்பிய தலைநகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் அதிகரித்து வரும்எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த அரசு விலை குறைந்த மருத்துவ வகைகளை இறக்குமதி செய்ய வேண்டும் என எதியோப்பிய மக்கள் நேற்று முன்தினம் தலை நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

எயிட்ஸ் நோயின் தாக்கத்தினால் அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்கள் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முக்கிய வீதிகளில் குறித்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதால் போக்குவரத்துக்கள் பல மணி நேரம் பாதிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை எதியோப்பியாவின் 6 கோடி மொத்த சனத்தொகையில் 30 இலட்சம் பேர் எச்.ஐ.வி. கிருமித் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமையும் இதனால் நாளாந்தம் 700பேர்வரையில் பலியாகி வருவதும்,

இந் நோய்த் தாக்கத்தினால் பெற்றோர் இழந்த சிறுவர்கள் தொகை 9 இலட்சத்தையும் தாண்டியிருப்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (உ-7)

## உலக தரிசனம்

## செய்திப்பரல்

★ இளவரசர் சாள்ஸ் ஏற்கனவே பெற்றிருக்கும் பட்டங்களுடன் ''அகோன்பரி மனோர் பிரபு'' என்ற பட்டமும் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

★ திபெத்திய ஆன்மீகத் தலைவருடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் சீனாவை வலியுறுத்தியுள்ளார்.

★ இத்தாலியின் மவுண்ட் எட்னா எரிமலை இருவார சீற்றத்திற்கு பின் தணிந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

★ ஈராக், குவைத் மீது படையெடுத்து 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

★ புற்றுநோய்ச் சிகிச்சை செய்ப இருப்பதால் நிறவெறிக்கு எதிரான உச்சி மாநாட்டில் உரையாடப் போவதில்லை என தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா அறிவித்துள்ளார். (க-03)

# ஊனமுற்ற பெண் ஒருவர் காலினால் எழுதும் விந்தை

(புதுடில்லி)

வாழ்க்கைப் பாதையில் வெற்றி நடை போடுவதற்கு உடல் ஊனம் ஒரு குறையல்ல என்பதை பெங்களூரைச் சேர்ந்த பெண் ஒருவர் நிரூபித்துள்ளார்.

17 வயதுடைய இப்பெண் பெங்களூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டு, தனது கால்களால் எழுதித் தயாரிக்கப்பட்ட மனு வொன்றைச் சமர்ப்பித்துள்ளார்

இவ்வாறு இவர் மனு சமர்ப்பிக்கும் புகைப்படக் காட்சி, 'டெய்லி மிரர்'' பத்திரிகையில் முதற் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (செ)

# தென்மேற்கு காற்று வீசும் போது திறந்த வெளிஎரிப்புகளுக்கு தடை விதிக்க வேண்டும்

(புறூணை)

மூத்த ஆசியான் சுற்றுப் புறச்சூழல் அதிகாரிகள்தென் மேற்கு காற்று வீசும்காலத்தில் திறந்த வெளி எரிப்புகளுக்கு தடை விதிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

வருடா வருடம் ஏற்படும் புகைமூட்டத்தொல்லைகளை நீக்குவதற்கு இது வழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

புறூணையில் கூடிய ஆசியன் சூழல் அதிகாரிகளின் கூட்டத்தில் எரிப்பு முனைகளைக் கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தோனேசியாவில் காட்டுததீயினால் கடந்த சில ஆண்டுகளாக அயல் நாடுகள்எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் பற்றியும் எடுத்து ஆராயப்பட்டது. (து)

# சென்னை புதுவையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழகத்தில் சென்னைமற்றும் புதுவையில் நேற்று பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

தமிழக முன்னாள்முதல்வர் மு. கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்களான முரசொலிமாறன், டி.ஆர்.பாலு ஆகியோர் முன்பு கைதுசெய்யப்பட்டமையைக்கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகவும்,

இதன் பின் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டதாகவும் மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ ஆணாக மாறிய பெண்

பெண்ணாகப் பிறந்த ஒருவர் பருவ வயதடைந்ததும் ஆணாக மாறி விட்டார் என்றால் அதிசயமாக உள்ளதா?

இந்தியா ஹிப்பிளியில் ஒரு தம்பதிகளுக்கு 7 ஆண் பிள்ளைகளிற்குப் பின்னர் அருமையாகப் பிறந்த ஒரு பெண் பிள்ளையே பருவ வயதை எட்டியதும் ஆணாக மாறியுள்ளார்.

அருமையாகப் பிறந்த தமது பெண் பிள்ளை ஆணாக மாறியது தமது துரதிர்ஷ்டமே என அத் தம்பதிகள் இப்போது அங்கலாய்க்கிறார்களாம்.

### ★ அதிக மொழிகள் அறிந்த மேதை

டென்மார்க்கைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் 146 மொழிகளில் சரளமாகப் பேசுவார் என்றால் நம்ப முடிகிறதா?

ஆனால் நம்பித்தானே ஆகவேண்டும்! கிறிஸ்டியன் ராஸ்க் என்ற இப் பேராசிரியர் உலகில் வாழ்ந்ததோ 45 வருடங்கள் இதற்குள்ளேயே அவர் 146 மொழிகளை அறிந்து வைத்துள்ளார் என்றால் அதிசயம் தானே!

இன்னுமோர் அதிசயம் என்னவென்றால் 25 க்கும் மேற்பட்ட மொழிகளில் இவர் அகராதிகளைத் தொகுத்துள்ளமை தான்.

-அவதானி-

# பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

(ஸ்கொப்பியா)

மசடோனிய அரசுக்கும் அல்பேனிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில இடைநிறுத்திவைக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற யுத்த நிறுத்தம், மீறப்படும பிணக்குகள் தொடர்பாகவே பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# பணிமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தொழில் முனைப்பு மேம்பாட்டுப்பணியகத் திறப்பு விழா நிகழ்வு நேற்று 6 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் யாழ். கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக் கட்டடத்தில் இடம் பெற்றது.

யாழ் செயலக உதவித்திட்டமிடற்பணிப்பாளர் எஸ் மகாலிங்கம் மேற்படி பணிமனையை ஆரம்பித்து வைத்தார். (க-06)

# நிலக்கண்ணி வெடித்து பத்துப் பேர் பலி

[புதுடில்லி]

அஸாம் பொமபேஹாம் மாவட்டம் போரா பஜார் என்ற இடத்தில் நிலக்கண்ணி வெடித்ததில் 10 பேர்பலியாகியுள்ளனர்.

அர்பூரி என்ற இடத்திலிருந்து சி ஆர் பி வீரர்கள் வாகனத்தில் சென்று கொண்டிருக்கையிலே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இறந்தவர்களில் 8 பேர் சி.ஆர்.பி வீரர்களென்றும் இரண்டு பேர் பொதுமக்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. [து]

# தி[illegible]மும் அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நல்லூர்க் கந்தன் திருவிழாவை ஒட்டி தினமும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. (க)

# சத்துணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலை தரம் 1 மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் மு.ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. [க-03]

மனநலம் நன்குடையர்
ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்(பு)
உடைத்து.
குறள்

# வலம்புரி

## புலிகளின் தெளிந்த முடிவு!

இலங்கையின் எந்த அரசாங்கத்தின் மீதும் தமக்கு நம்பிக்கையில்லையென விடுதலைப்புலிகள்மடுவில் தம்மைச் சந்தித்த நீதிக்கும் சமாதானத்திற்குமான நல்லெண்ணக் குழுவிடம் தெளிவுபடக் கூறியுள்ளனர்.

அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பில் தமக்கு அக்கறையோ, ஆர்வமோ இல்லையென்பதும் புலிகளின் மற்றொரு தகவல் இதிலிருந்து காலாகாலமாகஇலங்கையின்ஆட்சிப் பீடத்திலேறிய சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள், தமிழர்களின்உரிமை விடயத்தில் அக்கறை காட்டியதுமில்லை அக்கறை காட்டப் போவதுமில்லை என்பதே விடுதலைப் புலிகளின் முடிவு இது விடயத்தில் விடுதலைப் புலிகள் உறுதியாகவேயுள்ளனர்.

அதேவேளை விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்பது கருவிலுள்ள குழந்தைக்கும் நன்கு தெரியும்.

இந்நிலையில சிங்களப் பேரினவாத ஆட்சியில், பொதுஜனஐக்கிய முன்னணி இருந்தாலென்ன, ஐ. தே. கட்சியிருந்தாலென்ன அவை விடுதலைப்புலிகளின் நம்பிக்கையை பெற வேண்டுமாயின் அதற்கு இருக்கக் கூடியஒரே ஒருசந்தர்ப்பம் புலிகளமீதான தடையை நீக்குவதும் வன்னிக்கான பொருளாதார தடையை விலக்குவதுமாகும்.

இதனை அரசு செய்வதன மூலமே புலிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும், இனப் பிரச்சினைககுத் தீர்வுகாணவும் முடியும். இலலாதவிடத்து ஆயிரம் தடவைகள் அரசியல் யாப்பை மாற்றியமைத்தாலும் அடிபாடுகளும, தாககுதல்களும் நிற்கப்போவதில்லை.

விடுதலைப் புலிகள், தென்னிலங்கை அரசியல கட்சிகள் மீதுகொண்டுள்ள அபிப்பிராயம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பக்கம் நிற்பவர்களுக்கு மட்டுமன்றி ஐ. தே. கட்சியின் பக்கம் நிற்பவர்களுக்கும் பலத்த அடியாகவேயுள்ளது.

இதிலிருந்து சங்கீதக் கதிரைப் போட்டியில் ஈடுபட்டுள்ள தமிழ்க்கட்சிகள் அங்குமிங்கும் கதிரைமாறுவதை விடுத்து தனித்துவத்துடன் தமிழ்க்கட்சிகள் என்ற கொள்கையுடன் செயற்படுவதே அவர்களுக்கும் நல்லது அவர்களை நம்பி புள்ளடிபோட்டமக்களுக்கும் நல்லது.

# தோல் வியாதிகள் ஏற்படாமல் தடுப்பதற்கு சித்தமருந்துகள் சிறந்த பலன் அளிக்கின்றன

தவமலா விஜயரட்ணம்
D. A. M. S. (சித்தா)
மானிப்பாய் பிரதேசசபை

எம் உடலுக்கு அழகைக் கொடுப்பது சருமமே. சரீரத்தை வெளிச்சூழலிலிருந்து பாதுகாப்பதும். உடல வெப்பநிலையை பேணுவதும், வலி. ஸ்பரிசம் போன்ற உணர்வுகளை உணரப்படுத்துவதும் இந்த சருமமூலமே தோலில் உள்ள மெலனின் எனும் நிறப்பொருள் இருக்கும் வீதத்தைப் பொறுத்து தோலின் நிறம் மாறுபடும். மெலனின் வீதம் கூடினால் தோல் கறுப்பாகும், குறைந்தால்தோல்வெள்ளையாகும். மேல் தோலில் சூரி ஒளியினால் விற்றமின் D உற்பத்தி செய்யப்படுகின்றது.

இப்படியாக இயற்கையான பாதுகாப்பை தோல் நமக்கு வழங்குகின்றது. இதை

## மருத்துவ விளக்கம்

மேலும் பேணுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கிறோமா?

### இயற்கைவழி

தோலை பாதுகாக்க செயற்கையான இரசாயனப் பொருட்கள் சேர்ந்த பூச்சுக்களை சருமத்தில் தடவுவதிலும்பார்க்க இயற்கையான வழிமுறைகளை கையாள்வது மிகச்சிறந்ததாகும். குழந்தைகளுக்கு எண்ணெய் பூசி காலைச் சூரியஒளி படுமாறு வைத்திருப்பார்கள்.

வளர்ந்தவர்கள் இலுப் பெண்ணெயுடன் தேங்காய் எண்ணெய் கலந்து உடலில் தேய்ப்பதனால் தோலுக்கு மினுமினுப்பும், ரோகங்களிருந்து பாதுகாப்பும் கிடைக்கும்.

வேப்பிலை, கடுக்காய், பயற்றம்மா இவற்றை சமபங்கு கலந்து 2 மடங்கு கடுகு எண்ணெய்சேர்த்து உடல முழுவதும் தேய்த்துவர சருமரோகங்களில்இருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

### நோய் ஏற்படக்காரணம்

உடலின் வெளிபுறமாக தூசுக்களினாலும் வாசனைத் திரவியங்களை பூசுவதாலும் போர்ச்சூழ்நிலை காரணமாகச் சூழல் மாசடைவதாலும் (இவற்றின் தாக்கங்களால்) தோலில் புண்கள் ஏற்படுகின்றன மேலும் உடலின் உட்புறமாக சில ஒவ்வாமைத் தன்மையுள்ள உணவுகளை உண்பதாலும் அதாவது தக்காளி கத்தரி, நண்டு இறால் மற்றும் மாட்டு இறைச்சி, டயிற்றங்காய் போன்றவற்றை உண்பதாலும், சில மருந்துகளைத் தொடர்ந்து உண்பதாலும் சிலநோய்கள் காரணமாகவும் (பீனிசம, ஆஸ்தமா) தோல் வியாதிகள் ஏற்படலாம். இவற்றில் பிரதானமாகப் பாதிக்கப்படுவது இரத்த தாதுஆகும்.

### சருமரோகத்தின் விதங்கள்

சரும ரோகத்தில் பலவகை உள்ளன. கரப்பன், சொறி கரப்பன், வடடக்கரப்பன் என்பன குறிப்பிடத்தக்கவை. கரப்பனில வறள் கரப்பன் என்றும அசுகுணிக்(கரப்பன்) கிரந்தி என்றும காணப்படுகின்றன. கரப்பன் ஆனதுஉடலில எந்தப்பக்கத்திலும் வருமயினும பொதுவாக உளளங்காலில் நோவுடன்கூடிய சிறுசிறு பருககளை ஏற்படுத்த அவை சிலசமயம் கொப்புளங்களாக மாறியும். அப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள தோல்பகுதி சிவப்பாகவும், மாறிக்காணப்படும். புண் ஏற்பட்ட இடத்தில் சொறிவு தாங்கமுடியாததாக இருக்கும்.

வறள் கரப்பனில் உடம்பு வறண்டு நொந்து கை, கால் சந்துகளில் அதிசுரப்பி ஏற்பட்டு வீக்கம் உண்டாகி வறண்டு பின் வெடித்து புண்ணாகும் உடலில் சிறு சிறு பருக்கள் உண்டாகி சொறியும் போது சாம்பல்நிறப் பொருக்குகள் விழும். எனவே இது உடல்முழுவதும் பரவும்.

### அகரிணிக் கிரந்தி

கரபபன் தோன்றிய மாதிரி (Eczemawithdischarge) போக்களங்களில இருந்து கூடுதலாகச் சீழ் வடியும். அத்துடன் சொறியும், நோவும் காணப்படும், சீழ் கட்டிகள் கறுப்பாகவோ அன்றி சிவப்பாகவோ எரிவுடன்காணப்படும் சீழ்வடிவதனால் மற்றவர்களுக்கும் தொற்று ஏற்படலாம். சிலருக்கு நீர் மட்டும் வடியும்.

### சொறிகரப்பன்

இது நாட்பட்ட நோயாகும் (Chronic disease) இது தோலில் சிவந்த நிறத்தை (Erythematousarea) ஏற்படுத்தும இந்த இடத்தை மூடி அயர்கள (Scales) காணப்படும் இது உடலின் எல்லா இடத்திலும் ஏற்படுமாயினும் முழங்கை, முழங்காலின் வெளிப்புறமாக கூடுதலாக ஏற்படும். இந்த அயர்களை நாம் சுரண்டினால் மினுமினுப்பாகவும், வெள்ளி நிறமாகவும். உதிரும். இதுவே இந்த நோயின் பிரதான இலட்சணமாகும்.

பொதுவாக தோல் வியாதிகள் சில பரம் பரையாகவும், தொற்று வியாதியாகவும் ஏற்படலாம் மற்றும் மன நிலை பாதிப்பின் காரணமாகவும் தோலைச் சொறிவதினால் ஏற்படுகிறது.

### சித்த ஆயுர்வேத சிகிச்சை

பொதுவாக சித்த ஆயுர்வேத முறைப்படி சர்மரோகம் ஏற்பட்டால் உடம்பின் எவ்வளவு பகுதி தாக்கப்பட்டிருக்கிறது என்பதைபொறுத்து

1) முதலில் விரேச்சனம் (மலமிளக்கி) கொடுக்கவும்

2) பின் இரத்ததாது பாதிக்கப்படுவதனால் இரத்த சுத்திக்குரிய மருந்துகள் உட்கொள்ள வேண்டும்.

3) வெளி விரணங்களுக்கு (புண்) பூச்சுக்கள்எண்ணெய் கொடுக்கவும்.

4) ஒவ்வாமை காரணமாக ஏற்படின அவற்றை தெரிந்து உட்கொள்ளாமல் தவிர்த்தல் வேண்டும்.

விரேச்சனமாக தாத்திரி சூரணம், நிலபாவல் சூரணம், மாணிபத்திர சூரணம் ஆகியவற்றை உபயோகிக்கலாம். இரத்த சுத்திக்கு கெந்தர இரசாயனம், சிவகரந்தை சூரணம், பறங்கிக் கிழங்கு சூரணம், கைதர் குசகுளு குளிகை ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

குடி நீராக கதிர அரிஷ்டம் சாரிபா அரிஷ்டம், நிம்ப அரிஷ்டம் என்பவற்றையும், வெளி விரணங்களுக்கு விசர்பகரதைலம், பச்சை எண்ணெய் என்பனவற்றையும் உபயோகிக்கலாம்.

மேலும் புண்களைக் கழுவுவதற்கு வேப்பிலை, கறிவஞ்சள் போன்றவற்றை நன்றாக அரைத்துப் பூசி 5-10 நிமிடம் சழித்து கழுவிய பின்னர் எண்ணெய் பூசவும், சவர்க்காரத்திற்கு பதில் பச்சைப் பயற்றம் மாவை உபயோகிப்பது நன்மை தரும். □

# கிரனேற் வீச்சின் போது படையினர் மூவர் காயம்

## கிளாலியில் சம்பவம்

(கொழும்பு)

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள மேற்கொண்ட கிரனேற் தாக்குதலில் படையினர் தரப்பில் மூவர் படுகாயமடைந்த சம்பவம் கிளாலிப் பகுதியில் சில தினங்களுக்குமுன் இடம்பெற்றது.

காயமடைந்த படையினர் பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தகவலை விசேட தகவல் மையம் தெரிவித்துள்ளது. (க)

## தினசரி தியானம்

## பேரமைப்பு

அண்ட நாயகா, நீ அண்டங்களை அமைத்திருக்கும் முறையைக் காண்போர் மனங்கலங்குவது மில்லை, குறை கூறுவதுமில்லை.

இயற்கையின் அமைப்பு அருளே வடிவெடுத்தது. இம்மியளவு கேட்டையோ படசபாதகத்தையோ அதில் காணமுடியாது. நுண்ணிய தளிரை இரககத்தோடு அது பாதுகாககிறது பெருவலிவு படைதத ஒன்று அவ்வலிவை முறை தவறிக் கையாளாதிருககும் படி இயற்கை பார்த்துக கொள்கிறது அது கேட்டைக் களையவும், நலததைக் காககவும செய்கிறது இவ்வமைப்பை அறிவதும், அருளை அறிவதும ஒன்றே. அதை அறிபவர் அமைதி பெறுகினறனர்.

இம மாநிலத்தில இருந்த படியே யிருந்து
சுமமா அருளைத தொட்டருநாள எநநாளோ?

-தாயுமானவர்-
ஸ்ரீமத் சுவாமி சத்பவானந்தர்

# அறுபதுலொறிகளில் வன்னிக்கு உணவுப் பொருள்

(கொழும்பு)

படையினரின கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிக்கு சுமார் 60 லொறிகளில உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருளகள் கடந்த ஏழு தினங்களில் அனுப்பி வைக்கப்பட்டதாக விசேட தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இவற்றுள 32 லொறி உணவுப் பொருள்கள் கிளிநொச்சிக்கும் 22 றொறி உணவுப் பொருட்கள் முல்லைத் தீவிற்கும் அனுபபப்பட்டதாக மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியை சேர்ந்த மன்னார், மல்லாவி, முல்லைத் தீவுப் பகுதியிலிருந்து 49நோயாளர்களும 22 உதவியாளர்களும வவுனியாவிற்கு விரைந்துளளதாகவும் தெரிவிக்கபபட்டுள்ளது.

இதேவேளை வவுனியா வைத்தியசாலையிலிருந்து 65 நோயாளர்களும் 26 உதவியாளர்களும் சிகிச்சை முடிந்து வன்னிப் பகுதிக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

# எயிட்ஸைக் கட்டுப்படுத்த புதிய நடைமுறை

[கொழும்பு]

தனியார் துறையிடமிருந்து இரத்தம் பெறும் முறையை சுகாதார அமைச்சு இடைநிறுத்திவிருப்பதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எயிட்ஸ் நோய் பரவும் வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முடிவு இதுவெனவும், மத்திய இரத்தவங்கியில் இருந்து மாத்திரம் தேவையான அளவு இரத்தம் நோயாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் சுகாதாரபபணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். [உ-7]

## தொலைக் காட்சி அன்பளிப்பு

(உடுவில்)

வலிதெற்குபிரதேசசபைக்கு உட்பட்ட உடுவில், சுன்னாகம், ஏழாலை உப அலுவலகங்களுககுவர்ணத்தொலைக் காட்சிப் பெட்டிமற்றும் டெக் என்பனவழங்கப்பட்டுள்ளன.

இதனை வலி தெற்கு பிரதேசசபைத்தலைவர் க. கமலசேகரன் உரியவர்களிடம் வைபவ ரீதியாக ஒப்படைத்தார். (உ-129)

# சர்வஜன வாக்கெடுப்பு தோற்றாலும் அரசியலமைப்பு சமர்ப்பிக்கப்படும்

## பட்டிவீரக்கோன் தகவல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பில் போதிய வாக்குக்கள் கிடைக்காவிட்டாலும், புதிய அரசியலமைப்பை சமர்ப்பிக்க அரசாங்கம் தயங்காதென்று நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 86 ஆவது பிரிவில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப்பயன்படுத்தியே சர்வஜன அபிப்பிராயவாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் முன்வைத்துள்ளது

இந்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குக்களைப் பெறவேண்டிய அவசியம் இல்லை.

புதிய அரசியல் அமைப்பை சமர்ப்பிப்பதற்கான செயற்திட்டங்கள் தற்போது நடைபெறுகின்றன. எனவே அரசாங்கம் தயங்காது புதிய அரசியல்யாப்பை சமர்ப்பிக்குமென்றும் கூறினார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஐக்கிய தேசியக்கட்சி இணைந்து தேசிய அரசொன்று அமைக்கப்படுமானால் அத்தேசிய அரசில் தான் அங்கம்வகிக்கப் போவதில்லையெனவும் தேசிய அரசில் இணைய ஐ.தே. கட்சி முன்வந்தால் தான் பின் கதவால் வெளியேறுவோமெனவும் பட்டி வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## மரண தண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள், இளைஞர் ஒருவருக்கு பகிரங்க மரண தண்டனை வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு கொட்டியாவல பகுதியைச் சேர்ந்த கந்தவனம் சுவராஜா என்ற இளைஞனுக்கே பகிரங்க மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞன் இராணுவத்தினர் வழங்கிய கிளைமோர்க் குண்டுகளுடன் விடுதலைப் புலிகளால் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார் எனத் தெரிய வருகிறது. (இ)

## பிக்குகளின் மாநாடு இன்று

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பிற்கு எதிரான மாநாடு ஒன்றை புத்த பிக்குகள் இன்று கொழும்பில் நடாத்தவுள்ளனர்.

இம்மாநாட்டில் பௌத்த சங்கங்களைச் சேர்ந்த மூவாயிரம்பிக்குகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

தேசிய சங்கசபா, தேசிய ஒருங்கிணைப்புக்குழு, தாய்நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு, பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒன்றியம் ஆகியன இணைந்து இம்மாநாட்டை நடத்தவுள்ளனர். (வ)

# நல்லூர்கந்தன் சந்நிதியில் இசை அர்ச்சனை!

(யாழ்ப்பாணம்)

இவ்வருட கார்த்திகை உற்சவத்தின்போது நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை இசை அர்ச்சனை வைபவம் இடம்பெறவுள்ளது.

ஆலய உள்வீதியில் ஆறு திசைகளில் இவ்விசை அர்ச்சனை இடம்பெறும்.

யாழ்ப்பாணத்திலுள்ள இசைக்கலைஞர்கள் வாத்திய இசைக்கலைஞர்கள் அனைவரும் கலந்துகொண்டு இவ்விசை அர்ப்பணத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு மணித்தியாலங்கள் நடைபெறவுள்ள இவ்விசை ஆராதனையில் கலந்துகொள்ள விரும்பும் இசை மற்றும் வாத்தியக் கலைஞர்களை நாளை புதன்கிழமை மாலை 5 30 மணிக்குநல்லூர் ஆதீனத்தில் ஒன்றுகூடுமாறும் வேண்டப்பட்டுள்ளது. (ந)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) புள்ளிகளின் அடிப்படையில் தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரிய குளச்சந்தியில் உள்ள புதிய உயர் கல்வி நிலையத்தில் நடைபெறும். (ந)

## வடமராட்சி பகுதியில் புலிகளின் சுவரொட்டி

வடமராட்சிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலச்சினையுடன் கூடிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சுவரொட்டிகள் கரவெட்டி கிழவிதோட்டம் நெல்லியடி ஆகிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து அப்பகுதியில் உள்ளவீடுகள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிராமக்களுக்கு என்றதலைப்பிலான இச்சுவரொட்டியில் தேசவிரோத கும்பல்களுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டாம் என்றும் அவர்களது முகாங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அவர்களுடனான தொடர்புகளை துண்டிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளதுடன் விழிப்புக்குழு என்றபோர்வையில பொதுமக்கள் உளவுநடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-43)

## முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக் கழக [வெளிவாரி] தகவல் தொழில் நுட்ப பட்டப்படிப்பில் பதிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சைமுடிவுகள் வெளியாகியுள்ளன

ஐ பி எம்.எஸ் கணனிநிறுவனத்தில் பதிவுசெய்தமாணவர்கள் தமது முடிவுகளை பார்வையிடமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகளுக்கு

நன்கு தெரிந்தவராக இருக்க வேண்டுமெனபுலனாய்வுப்பிரிவினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

கறுப்புநிறமுகமூடி அணிந்த மேறபடி சந்தேக நபர் விடுதலைப்புலிகளைவிமானத்தளத்துக்குள் கொண்டுவந்துவிட்டு விட்டு, மர்மமான முறையில் தலைமறைவாகியுள்ளார்.

இம்மர்மமனிதரைத்தேடிக் கண்டுபிடிப்பதில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். (இ)

### புலிகளின்...

பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில விடுதலைப் புலிகளுக்கு சார்பான போக்கை கடைப்பிடிக்கும் மூன்று தமிழ் கட்சிகள் ஆதரவைப பெற்றுக்கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி சுயமாகச் சிந்திக்காமல் புலிகளின் விருப்பத்திற்கு அமைவாக சர்வஜன வாக்கெடுப்பு, அவசரகாலச் சட்ட நீடிப்பு ஆகியவற்றுக்கு எதிராக செயற்படுவதுடன் இன்றைய இக்கட்டான நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றதெனவும் பிரதமர் ஐக்கிய தேசியக்கட்சியை சாடியுள்ளார்.

இதேவேளை 1978ம் ஆண்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனா கொண்டு வந்த தற்போது நடைமுறையில் உள்ள யாப்பை மாற்றி அமைக்கும் தேசிய பொறுப்பு மிக்க நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டார் (இ)

### 48 மணித்தியாலத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக ஜனாதிபதி நேற்றிரவு முக்கிய சிரேஷ்ட அமைச்சர்களை அழைத்து கலந்துரையாடியதாகவும தேர்தல பிரசாரத்தில ஈடுபட்டுள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவை நேற்றிரவு அவசர அவசரமாக அழைத்து அவருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியதாகவும் தெரியவருகிறது.

எதுவாயினும் நாளை மறுதினம தபாலமூலவாக்களிப்பு இடம்பெறுவதற்கு முன்னதாக வாக்கெடுப்பின் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய நிலையில் அரசு இருப்பதும இங்கு குறிப்பிடத்தக்கது. (ந

### சங்கர்...

பட்டன.

விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் இவரின் விசாரணை தொடர்பான அறிக்கை சட்டமா அதிபரிடமிருந்து வரும் வரை வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். (ந-4)

### கூட்டணி...

ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளோம

அத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்துமாறும் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை மீண்டும் தொடங்குமாறும் ஜனாதிபதியை கோரவுள்ளோம் என்றும் கூறினர். [இ-05]

### மோசடிகளை...

கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும என்றும்,

தேர்தலின் போது அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவை அரசாங்கம் பயன்படுத்துவதை அனுமதிக்கக் கூடாதென்றும,

அண்மையில் புதிதாக எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும், தேர்தல் ஆணையாளரிடம் வற்புறுத்திக் கேட்டுள்ளனார்;

இச்சந்திப்பின் போது கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி யாழ்ப்பாணத்தில் மோசடி அற்ற தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதுடன் கடந்த தேர்தல்களின் போதுஇடம் பெற்ற மோசடிகளை நடக்கவிடக் கூடாதென்றும் சில ஆலோசனைகளை தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்த தேர்தல் ஆணையாளர் இவை தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதி அளித்தார்.

இது இவ்வாறிருக்க சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்யுமாறும் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறும் கோரும் எதிர்க்கட்சிகள், தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து நீதியான தேர்தலை நடத்தக் கோரியிருப்பது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வைரவிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

ஆவரங்கால் சிவன் வீதியை பிறப்பிடமாகவும் சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் சின்னத்தம்பி வைரவிப்பிள்ளை சுன்னாகத்தில் நேற்று (06-8-2001) காலமானார் அன்னார் ஞானபூங்கோதை (இளைப்பாறிய ஆசிரியரின் அன்புக்கணவரும், திருமதி சரோஜா ஜெகதீஸ்வரன (கனடா), திருமதி சர்வேஸ்வரி இராஜேந்திரன் (மலேசியா), திருமதி சத்தியவதி இரவிகுமார் [ஆசிரியை யா/சரசாலை சரஸ்பதி வித்தி. யா/ பலாலகம் ம.வி.) சிவகுமாரர் (கணனிப்பொறியியலாளர் UK.), திரு. விஜயகுமாரன் (ஆசிரியர் யா/கொடிகாமம் அ.த.க.ப) யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் மானிப்பாய்) திரு. நந்தகுமார் கணனித் தொழில்நுட்பவியலாளர் BRUNBI ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ஜெகதீஸ்வரன (கனடா), இராஜேந்திரன்(மலேசியா) திரு. ந இரவிகுமார் (ஆசிரியர் யா,சாவகச்சேரி இந்துக்கல்லூரி, திருமதி சிராஜினி (U K) ஆகியோரின் அன்புமாமனாரும் கார்த்திகா, தாசிகா ஆகியோரின அன்பு பேரனும் அமரத்துவமடைந்த சபாபதிப்பிள்ளை (ஆவரங்கால்). திருமதி இராசம்மா மாணிக்கவாசகர் (புத்தூர்) ஆகியோரின் சகோதரனும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 2 மணிக்கு (07-08-2001) தற்காலிக வதிவிடத்தில நடைபெற்று பூதவுடல் கொத்தி ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்;

தகவல்

திரு வை. விஜயகுமார்

தற்காலிக முகவரி
தில்லைகடடிலேன்,
புகையிரத நிலைய அருகாமை,
சுன்னாகம்.

மகன் (ஆசிரியர்)
யா/விக்கினேஸ்வரா மகா. வி.
மீசாலை,
மானிப்பாய்.

நிரந்தர முகவரி: சரசாலை தெற்கு.
சாவகச்சேரி. (3445)

நவநாகரிக தங்க நகைகளுக்கு
நிருத்திகா ஜுவலர்ஸ்
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி-2367)
T. P 021-2694

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001,ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.